இணைப்பு XIII.

[595ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 220-க்கான விடையைக் காண்க].

விடை—

(அ) மற்றும் (ஆ) இது வரை தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக, 1969-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை நிலக் குத்தகை உரிமைப் பதிவுச் சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்டுள்ள குத்தகை தாரர்கள், பதிவு செய்வதற்கு விண்ணப்பம் கொடுத்துள்ள குத்தகைதாரர்கள் பற்றிய விவரங்கள் மட்டுமே உள்ளன. அவை வருமாறு:—

வரிசை எண்.	மாவட்டம்.	பதிவு செய்யப்பட்ட குத்தகை தாரர்கள்.	பதிவு செய்யப்பட்ட குத்தகை நிலப் பரப்பு.	இதுவரை பதிவு செய்வதற்கு விண்ணப்பம் கொடுத்துள்ள குத்தகை தாரர்கள்.	பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கொடுத்துள்ளவைகளில் நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட குத்தகை தாரர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	செங்கல்பட்டு	12,960	18,991	12,965	5
2	தென்ஆற்காடு	14,057	17,310	14,708	651
3	வட ஆற்காடு ..	31,653	52,301	31,662	9
4	தஞ்சாவூர்	1,25,319	2,51,227	1,25,967	648
5	திருச்சிராப்பள்ளி ..	58,287	67,748	59,057	770
6	புதுக்கோட்டை	7,261	13,876	8,049	788
7	கோயம்புத்தூர்	15,772	37,202	16,505	733
8	சேலம்	8,883	18,712	8,938	55
9	தர்மபுரி	8,812	25,659	8,953	141

(1)		(2)	(3)	(4)	(5)
10	மதுரை	35,926	41,132	36,547	621
11	இராமநாதபுரம்	15,253	14,557	15,809	556
12	திருநெல்வேலி	68,653	47,290	70,326	1,673
13	கன்னியாகுமரி	3,945	3,533	3,965	20
14	நீலகிரி	1,271	4,502	1,271	..
	மொத்தம்	4,08,052	6,14,040	4,14,722	6,670

குத்தகை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களின் நிலுவைக்கானக் காரணங்கள்.

1969-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை நிலக் குத்தகை உரிமைப் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு அதிகாரிகளாக விளம்பரப்படுத்தப்பட்ட வட்ட ஆட்சியர்களிடமும் தனி வட்ட ஆட்சியர்களிடமும் நிலுவையிலுள்ள கோப்புகள் விசாரணையில் இருக்கின்றன.

(இ) மேற்படி நிலுவையை பரிசீலிப்பதில் துரிதப்படுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள்:—பதிவு அதிகாரிகளால் செய்யப்படும் பணியினை வருவாய் வாரியம் (நிலச்சீர்திருத்தம்) ஆய்வுரை செய்து குத்தகைப் பதிவு செய்துகொள்வதற்காக உள்ள மனுக்களைப் பரிசீலிப்பதை துரிதப்படுத்துவதற்கு ஒவ்வொரு மாதமும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. இது தவிர இத்தகைய மனுக்களை விவரமாக பரிசீலித்து நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், கூடுதல் மாவட்ட ஆட்சியர்கள் ஆகியவர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டங்களில் குத்தகைதாரர்களை பதிவு செய்வதை துரிதப்படுத்த கூடுதல் பணியாளர்களை நியமிப்பது பற்றி வருவாய் வாரியம் அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.